# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

அ.வ.எண். 94/2020 தேதி-19.06.2025

(P.W.1) - ஞானதாஸ்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.1 ஆவணம் மலையாளத்தில் இருக்கிறது. அதில் பழைய சர்வே எண்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பாகப்பிரிவினை (வா.சா.ஆ- 1) பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் பி பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பி பட்டிகை சொத்து எவ்வளவு விஸ்திரம் இருக்கும் என்றால் 62 சென்ட். அதை பகவதியம்மாள், பார்வதியம்மாள், கோமளா அம்மாள், லலிதாபாய் அம்மாள், பிரசன்னா குமாரி, ராதாகிருஷ்ண நாயர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடுவதுபோல் 6 பேருக்கு ஒதுக்கப்படவில்லை. 5 பேருக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

மேலே குறிப்பிடப்படும் 6 நபர்களில் யாரிடமிருந்து நான் வழக்கு எ பட்டிகை சொத்தை வாங்கினேன் என்றால் நான் சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து வாங்கினேன். சுஜாதா குமாரிக்கு பவர் கொடுத்ததன்மூலம் சுரேஷ் குமார் எனக்கு வழக்கு பட்டிகை எ சொத்தை எழுதிக்கொடுத்தார். சுரேஷ் குமார் மற்றும் சுஜாதாகுமாரி ஆகியோர் வா.சா.ஆ. 1 பி பட்டிகை சொத்தின் உரிமையாளர் இல்லை அந்த உரிமையாளரிடமிருந்து விலைக்கு வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சுரேஷ்குமார் யாரிடமிருந்து சொத்தை வாங்கினார் என்கிற விபரம் எனக்குத் தெரியாது.

சுஜாதாகுமாரி மேற்படி 6 நபர்களிடமிருந்து விலைக்கு வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரம் பி பட்டிகை கூட்டாக எழுதிக்கொடுத்ததா அல்லது தனித்தனியாக எழுதிக்கொடுக்கப்பட்டதா என்கிற விபரம் எனக்குதெரியாது. வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டிருக்கும் 7 வது நபர் இந்த வழக்கின் முதல் பிரதிவாதி என்றால் சரிதான்.

2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் சி பட்டிகை சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு பழைய சர்வே எண் 1552 ல் 89.33 சென்ட் பரப்பளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

என்னுடைய பிராதில் 1வது பராவில் நான் 1வது பிரதிவாதிக்கு 89.33 சென்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறது என கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பிளான் எ வரைபடத்தில் நீலநிறத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும் பரப்பளவுதான் பி பட்டிகை சொத்து என்றால் சரிதான். அந்த பி பட்டிகை சொத்தில் மேற்கு பக்கம் வழிப்பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழிப்பாதை எவ்வளவு பரப்பு என்றால் 15 லிங்ஸ் வீதியிலிருந்து 20 லிங்ஸ் வீதி இருக்கும்.

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் சிவப்பு மையால் குறிப்பிட்டிருப்பது வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரப்படியும் கருப்பு மையால் குறிப்பிட்டிருப்பது ரீசர்வே பிளான்படியும் உள்ளது என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகளுக்கு பத்திர எண் 710/2017 படி 7.33 7 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஆனால் மேற்படி பத்திர எண் 710/2017 படி 8 சென்ட் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.4 கிரைய பத்திரப்படி 2 ஆம் பிரதி 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து மற்றும் 1 ஆம் பிரதிவாதி உண்மையான உரிமையாளரிடமிருந்து வாங்கினார் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எனது வீட்டிற்கு வழிப்பாதை இல்லை வழிப்பாதை கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது வீட்டிற்கு செல்வதற்கு பி பட்டிகை சொத்தை தொட்டு மேற்கு பக்கம் 15 லிங்ஸ் வீதியில் பாதை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எனது பிராது பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல. இந்த வழக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மற்றும் பிரதிவாதிகளுக்கு வழக்கு செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.